# கலைஞரும் நானும்

76

**“முத்தமிழறிஞர் கலைஞரிடம், திருவாரூர்க்காரர்கள் தனி பாசத்தினை உணரலாம். அதேநேரத்தில், மரியாதை, அன்பு, வியப்பு என கலைஞர் மீது நான் கொண்டிருந்த உணர்வும் விவரிக்கமுடியாதது” என தனது நினைவுகளைப் பகிர்கிறார் ‘கலைஞரின் கடிதங்கள்’ (முழுதொகுப்பு), ‘கவிதை மழை’ நூல்களின் பதிப்பாளர் கௌரா ராஜசேகரன்.**



# “கலைஞரின் நூல்களால் பெருமை!”

கௌரா ராஜசேகரன், பதிப்பாளர்

*“முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை எழுத்துகள் வழி, பேச்சுகள் வழி அறியாதவர்கள் யார்? அவர் திருவாரூர்க்காரர் என்பதில், எங்களுக்கு எப்போதும் பெருமையாக இருக்கும். அதேநேரத்தில் அரசியல் கருத்துகளால் மாறுபாடு கொண்டிருந்த நான், 1996–ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் என் பார்வையை மாற்றிக் கொண்டேன்.*

*மக்கள் நலத் திட்டங்கள் பலவற்றைச் செயல்படுத்தி மறுமலர்ச்சி ஏற்பட வழி செய்தார். அந்த ஆட்சிக் கால சாதனைகளை எல்லாம் தொகுத்து, 1998–ஆம் ஆண்டில், ‘கலைஞரின் சாதனைக் களஞ்சியம்’ என்கிற நூலைக் கொண்டு வந்தேன். அந்த நூலை கலைஞர் அவர்களிடம் அளிப்பதற்காக, என் மனைவி கௌமாரீஸ்வரியுடன் கோபாலபுரம் இல்லத்துக்குச் சென்றிருந்தேன். அவர் மாடிப் படியிலிருந்து இறங்கி வந்த நேரத்தில், நூலினைக் கொடுத்துவிட்டு, கொஞ்சம் தூரமாக நின்றேன். நூலினை வாங்கிப் பார்த்தவர், என்னை அருகில் அழைத்து விசாரித்தார். அன்றுதான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை முதன்முதலில் அருகில் பார்த்தேன்.*

## போரும் அமைதியும் அளித்த வாய்ப்பு

*அய்யா சின்னக்குத்தூசி அவர்களின் அறிமுகத்தின் மூலம் 2003–ஆண்டில் தலைவர் கலைஞர் அவர்களின் ‘கவிதை மழை’ நூலினை வெளியிடும் வாய்ப்பு அமைந்தது. அன்று முதல் நான் பெருமை பெற்றவன் என்றால், மிகையில்லை.*

*சின்னக்குத்தூசி அய்யா அவர்களுக்கு எனது பதிப்பகத்தில் இருந்து வெளியிடும் புதிய நூல்களின் முதல் படியை அளிப்பது வழக்கம். சில நாட்களில் இரண்டு படிகளாகத் தாருங்கள் என்றார். “நீங்கள் கொடுக்கிற புத்தகத்தை அலுவலகத்துக்கு எடுத்துச் சென்றால், தலைவரின் மேசைக்குச் சென்று விடுகிறது. திருப்பிக் கேட்க மனமில்லை ஆகையால், இரண்டு படிகளாகத் தாருங்கள்” என்றார்.*

*2003–ஆம் ஆண்டில், புகழ்பெற்ற ரஷ்ய நாவலான ‘போரும் அமைதி’யும் நூலினைக் கெட்டி அட்டையில் பதிப்பு செய்திருந்தேன். 2,500 பக்கங்கள் கொண்ட அந்த நூலினை “தன்னால் சுமக்க முடியாது, அதனால் கோபாலபுரம் சென்று அய்யா சண்முகநாதனைப் பார்த்து நீங்களே கொடுத்துவிடுங்கள்” என்றார். கோபாலபுரத்துக்கு வந்தபோது, அய்யா சண்முகநாதன் அவர்களும், “நீங்களே கொடுத்துவிடுங்கள்” என தலைவரைச் சந்திக்க வழி ஏற்படுத்திக் கொடுத்தார்.*

*தலைவரைச் சந்திக்கச் சென்றால், “உட்காருங்க” என்பதுதான் முதல் வார்த்தையாக இருக்கும். முதன்முதலில் சந்தித்தபோதும், அப்படித்தான். “உட்காருங்க” என்றார். நான் தயங்கியபடியே நின்றதால், “உட்காருங்க” என்று கொஞ்சம் அழுத்தமாகக் கூறினார். அப்போது முதல், தலைவர் அவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் புதிய நூல்களை அளிப்பது வழக்கமானது.*

## வாசிப்பு வேகம்

*புதிய புத்தகங்களை வாங்குவது, வாசிப்பது, அவற்றை அடையாளப்படுத்துவது என்றால் அவ்வளவு உற்சாகமாகிவிடுவார். அவரது வாசிப்பு வேகமும் வியப்பளிக்கும். ‘சிதம்பரம் அந்தாதி’ என்கிற நூல். வியாழக்கிழமை மாலை அய்யா சின்னக்குத்தூசி அவர்களிடம் சேர்ப்பித்திருந்தேன். வெள்ளிக்கிழமை தலைவரிடம் அளித்துள்ளார். தலைவர் வாசித்துவிட்டு, அந்த நூல் குறித்து, சனிக்கிழமை கட்டுரை எழுதி, ஞாயிற்றுக்கிழமை முரசொலியில் வெளியாகிறது. அப்படியிருக்கும் அவர் வேகம்.*

*‘போரும் அமைதி’யும் நூலினைக் கொடுத்த, சில நாட்களுக்குப் பின் செல்கையில், ‘போரும் அமைதியும்’ நூல் முன்னர் பதினைந்து பாகங்கள் கொண்ட சின்னச் சின்ன நூல்களாக வந்தது, அவற்றை மூன்று பாகங்களாக நாங்கள் தொகுத்த விவரத்தைக் குறிப்பிட்டு, வியப்பு ஏற்படுத்தினார். இப்படிப் போய்க் கொண்டிருந்தபோதுதான், சின்னக்குத்தூசி அய்யா, “தலைவர் நூல் வெளியிடுவது தொடர்பாக சண்முகநாதன் தொடர்பு கொள்வார்” என்றார்.*

## கவிதை மழை

*தலைவர் நூல் போடுவது நமக்குச் சரிப்பட்டு வராது என மறுத்துவிட்டு, அமைதியாக இருந்தேன். குத்தூசி அய்யா மீண்டும் ஒருநாள் நினைவூட்டினார். அவரது பேச்சைத் தட்டமுடியாமல், சண்முகநாதன் அய்யாவைச் சந்தித்தேன். அவர் மாடிக்கு அழைத்துச் சென்று, தலைவரிடம் “கவிதைகளைத் தொகுக்க வேண்டும் என்று சொன்னீர்களே, அதற்காக திருவாரூர் தியாகராஜன் அனுப்பி இருக்கிறார்” என்றார். தலைவர் உடனே தனது ‘கவிதை அல்ல’ நூலினை எடுத்துக் கொடுத்து, முதலில் இதில் உள்ளவற்றை ‘டைப்’ செய்யவும் எனக் கூறியதுடன்,*

**வியாழக்கிழமை மாலை அய்யா சின்னக்குத்தூசி அவர்களிடம் அளித்த நூல் வெள்ளிக்கிழமை தலைவரிடம் சேர்கிறது. தலைவர் வாசித்துவிட்டு, சனிக்கிழமை கட்டுரை எழுதி, ஞாயிற்றுக்கிழமை முரசொலியில் வெளியாகிறது.**

*“சிறப்பா செஞ்சிருங்க, விரைவில் செஞ்சிருங்க”என வலியுறுத்தி அனுப்பினார். அந்த நூல் பணிகளுக்கு சண்முகநாதன் பெரிதும் உறுதுணையாக இருந்தார்.*

*‘ஒவ்வொரு கவிதைக்கும் ஒரு ஓவியம் வேண்டும்’ என தலைவர் விரும்பினார். அதேபோல, ஒரு கவிதை, அதற்குரிய ஓவியம் வரைந்து, தலைவரிடம் காட்டி வந்தோம். 2004–ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் பணிகளின்போது, ‘கவிதை மழை’ நூலின் மெய்ப்புப் படிகளும் தலைவருடன் பயணம் செய்தன.*

*அவர் மெய்ப்பு பார்த்து அளித்த படியில், ‘ஜீவா வாழ்க’ என்ற கவிதையில் ஜீவா என்பதில் திருத்தம் இருந்தது. அது தொடர்பான சந்தேகத்தை அய்யா சண்முகநாதன் வழி கேட்டிருந்தேன். அவரும் தலைவரிடம் கேட்டு ‘ஜீவா வாழ்க’தான், தெரியாமல் அந்த கிறுக்கல் வந்துவிட்டது என தலைவர் கூறியதாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.*

*அந்த நேரத்தில் ‘லிப்ட்’ வழியாக இறங்கிய தலைவர், “ராஜசேகர், அது ஜீவா வாழ்கதான், என் கை தவறி கிறுக்கிவிட்டது” என்றார். நான் உடனே, “இப்பொழுதுதான் சண்முகநாதன் அய்யாவும் இந்தக் கருத்தைச் சொன்னாங்க” என்றேன். தலைவர் உடனே,“ஏன் ஜீவா வாழ்க என நான் சொன்னால், கேட்க மாட்டீர்களா” என அந்த இடத்தைக் கலகலப்பாக்கினார்.*

*அந்த நூலுக்கு அட்டை வடிவமைப்பின் போது, ஒருநாள் அழைத்து, ஆங்கிலத்தில் வெளிவந்த பில் கிளிண்டன் வாழ்க்கை வரலாற்று நூலைக் காட்டினார். அதன் மேலட்டை உள்பக்கமாக மடிக்கப்பட்டு, மடிக்கப்பட்ட இடத்தில் குறிப்புகள் இருக்கும். அதேபோல செய்யலாம் என ஆலோசனை கூறினார். இப்படி, நூல் தயாரிப்பில் ஒவ்வொன்றையும் பார்த்துபார்த்து செய்தார். அந்த நூல் வெளியூர் விற்பனையகங்களில் எங்கு எங்கு கிடைக்கிறது என்பதை அக்கறையுடன் விசாரிப்பார்.*

## இராவண காவியம்–சீதை பதிப்பகமா?

*அந்தப் பணிகளுக்குப் பின்னர், தலைவரின் சிறுகதைகளைத் தொகுத்து, சிறுகதைப் பூங்கா நூல் கொண்டு வருவதற்கு அனுமதி அளித்தார். அந்த நூல் வெளியீட்டு விழாவில், நன்றியுரை “ராஜசேகர் செய்யட்டும்” என என்னை மேடை ஏற்றினார்.*

*கல்வி நிலையங்களில் தலைவர் கலைஞர் பேசிய பேச்சுகளைத் தொகுத்து, நூல்களாகக் கொண்டுவந்தபோது மகிழ்ந்தார். நூல்களுடன் அவரைச் சந்திக்கும் ஒவ்வொருமுறையும் தனித்தனி அனுபவங்கள் கிடைக்கும்.*

*ஒருமுறை பிறந்த நாள் வாழ்த்துப் பெற, நான் என் துணைவியார், தம்பியின் துணைவியார், மாமியார் என சென்றிருந்தோம். அப்போது தலைவரிடம் ‘இராவண காவியம்’ நூலினைக் கொடுத்த உடன், “ போடுவது கருப்புச் சட்டை, போடும் புத்தகம் இராவண காவியம், பெயர் மட்டும் சீதை பதிப்பகமா?” என நகைச்சுவையுடன் கேட்டார். தலைவரின் நெஞ்சில் அந்த அளவுக்கு இடம் பெற்றிருந்தேன் என்பது என்றென்றைக்கும் மகிழ்ச்சி அளிக்கக்கூடியது.*

*தலைவர் மீது கொண்டிருந்த பற்றுதான், கழகத்தின் இன்றைய தலைவர் அவர்களின் வழியாக தலைவர் கலைஞரின் கடிதங்களைத் தொகுத்து நூலாகக் கொண்டு வரும் வாய்ப்பினைக் கொடுத்தது. தலைவரின் நூல்களைச் சுமந்து செல்வது என் வாழ்நாளுக்கு மட்டுமல்ல; என் தலைமுறைகளுக்குமான வாய்ப்பு.*

***....பகிர்வார்கள்***

## இந்தியா, ‘இந்து ராஷ்டிரம்’ ஆக முடியாது!

நோபல் விருது பெற்ற பொருளாதார மேதை அமர்த்தியா சென், வெறுமனே தரவுகள், எண்கள் அடிப்படையில், பொருளாதாரத்தை அணுகுபவர் அல்ல. மனிதநேயக் கண்ணோட்டத்துடன் பொருளாதாரத்தை அணுகும் அறிஞர். குறிப்பாக “வளர்ச்சி என்பது அனைவரையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். ஏழைகளுக்கும் செல்வந்தர்களுக்குமான இடைவெளி குறைய வேண்டும்’ என்பதை அழுத்தமாக வலியுறுத்துபவர். கொல்கத்தா விமான நிலையத்தில், சமீபத்தில் அளித்த நேர்காணலில் “இந்தியா ‘இந்து ராஷ்டிரம்’ ஆக முடியாது என்பதையே, சமீபத்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் உணர்த்தியிருக்கின்றன” என்று கூறியிருக்கிறார்.

மேலும் “பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில்தான் யாரையும் விசாரணையின்றி சிறையில் தள்ளும் நடைமுறை இருந்தது. அதற்குப்பிறகு பா.ஜ.க. ஆட்சிக் காலத்தில்தான் விசாரணையின்றி பலரையும் சிறையில் வைத்திருக்கும் அவலம் தொடர்கிறது” என்று கூறிய அமர்த்தியா சென், “சென்ற மோடி ஆட்சிக்காலத்தில் இருந்த அதே அமைச்சர்களே இப்போதும் தொடர்கின்றனர். இவர்கள் மாற்றப்பட வேண்டும். பா.ஜ.க.வே மீண்டும். ஆட்சிக்கு வந்திருப்பதால் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்குமான பொருளாதார இடைவெளி அதிகரிப்பதும், விசாரணையின்றி சிறையில் தள்ளும் முறையும் நீடிக்கிறது. இவை நிறுத்தப்பட வேண்டும்” என்றும் தெரிவித்திருக்கிறார்.

90 வயதானபோதும் பா.ஜ.க.வின் மதவாதத்தையும் மனித உரிமை மீறலையும் வெளிப்படையாக விமர்சிக்கும், மக்கள் நலனில் அக்கறை கொண்ட அமர்த்தியா சென் போன்ற சிந்தனையாளர்கள் நமக்கு நம்பிக்கை அளிக்கிறார்கள்.

## :.ப்ளாஷ்பேக்



### கோவையில் முப்பெரும் விழா!



பொன்மலை குமாரசாமி

2004–ஆம் ஆண்டில், கழகத்தின் முப்பெரும் விழா, கோவை, சி.ஐ.டி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. வழக்கமாக, சென்னையில் நடைபெறும் விழா, அந்த ஆண்டு கோவையில் கொண்டாடப்பட்டது. விழாவுக்கு வருகை தந்த தலைவர் கலைஞரை, கோவை இரயில் நிலையத்தில் அதிகாலை 3 மணிக்கே சென்று வரவேற்றோம். கழகத் தோழர்களுடன் வரிசையில் நின்று தலைவர் அவர்களுக்கு, தந்தை பெரியார் சிலையை வழங்கியது, வாழ்க்கையின் மறக்க முடியாத மகிழ்ச்சியான தருணம். மேடையில், பொங்கலூர் பழனிசாமி, ‘கோவைத் தென்றல்’ மு.ராமநாதன், கா.ரா.சுப்பையன், அருண்குமார் ஆகியோர் உள்ளனர்.

**– பொன்மலை குமாரசாமி, முன்னாள் மாவட்டப் பிரதிநிதி, கிணத்துக்கடவு, கோவை தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### தொழிலாளர்களை அடிக்கவில்லை, கொன்றனர்!

1958–ஆம் ஆண்டு, கருப்புக்கொடிப் போராட்டத்திற்குப் பின்னர், சட்டமன்றத்தில் காவல்துறையின் அத்துமீறல் குறித்து, நீண்ட பேருரை ஆற்றினார், பேரறிஞர் அண்ணா. அண்ணாவின் பேச்சுக்கு இடையிடையே அமைச்சர்கள் விளக்கமளித்துக் கொண்டே இருந்தனர். அப்போது, தொழிலாளர் துறை அமைச்சராக இருந்த ஆர்.வெங்கட்ராமன் குறுக்கிட்டு, “தொழிலாளர்களை அடிக்கவில்லை” என்றார். பேச்சைத் தொடர்ந்த அண்ணா, “தொழில்துறை அமைச்சர் சொல்வது உண்மை, காவல் துறை, தொழிலாளர்களை அடிக்கவில்லை. சுட்டுக் கொன்றார்கள்” என மடக்கிய போது அவையே அமைதியாகிவிட்டது .

## திராவிடத்தால் வாழ்கிறோம்

524

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131